
தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 93 | 4 Pages | 2.11.2024 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 93 | 4 பக்கங்கள் | 2.11.2024 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்**
**தன்னையே கொல்லுஞ் சினம்**

**விளக்கம்:**
ஒருவன் தன்னைத்தான் காத்துக் கொள்வதானால் சினம் வராமல் காத்துக் கொள்ள வேண்டும், காக்கா விட்டால் சினம் தன்னையே அழித்து விடும்.

## அசுத்தமான கழிப்பறை: ரெயில் பயணிக்கு ரூ. 30 ஆயிரம் இழப்பீடு வழங்க நுகர்வோர் நீதிமன்றம் உத்தரவு



ஆந்திரா, நவ.1

திருப்பதியில் இருந்து விசாகப்பட்டினத்தில் உள்ள துவ்வாடா வரையிலான ரெயில் பயணத்தின் போது 55 வயது நபரும் அவரது குடும்பத்தினரும் கடும் சிரமத்திற்கு ஆளானதால் அவருக்கு இழப்பீடாக 30,000 ரூபாய் வழங்குமாறு இந்திய ரெயில்வேக்கு நுகர்வோர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருமலா எக்ஸ்பிரஸ் ரெயிலில் மூர்த்தி என்பவர் 4 ஏ.சி. டிக்கெட்டுகளை பதிவு செய்து பயணம் மேற்கொண்டார். பயணத்தின் போது அவர்களின் பெட்டியில் ஏர் கண்டிஷன் சரியாக வேலை செய்யவில்லை. மேலும் கழிப்பறை அசுத்தமாகவும், தண்ணீரும் வரவில்லை. பயணம் முழுவதும் சுகாதாரமற்ற சூழ்நிலையில் சிரமங்களை எதிர்கொண்டு பயணம் மேற்கொண்டனர். மேலும் இதுகுறித்து துவ்வாடாவில் உள்ள சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் மூர்த்தி புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதை தொடர்ந்து அவர் விசாகப்பட்டினத்தில் உள்ள நுகர்வோர் நீதிமன்றத்தை அணுகி வழக்கு தொடர்ந்தார்.

வழக்கு நீதிமன்றத்திற்கு வந்தபோது, குற்றச்சாட்டை மறுத்த ரெயில்வே துறை, பொய்யான குற்றச்சாட்டை மூர்த்தி கூறியுள்ளதாகவும், ரெயில்வே வழங்கிய சேவைகளைப் பயன்படுத்தி மூர்த்தியும் அவரது குடும்பத்தினரும் பாதுகாப்பாக பயணத்தை மேற்கொண்டதாகவும் கூறியது.

இருப்பினும், நுகர்வோர் நீதிமன்றம், புகாரைப் பெற்ற பிறகு, சம்பந்தப்பட்ட ஊழியர்கள் அதைப் பார்வையிடவில்லை என்றும் கழிப்பறைகளுக்கு நீர் தடைபட்டதைக் கண்டறிந்ததாகவும் தெரியவந்தது. இதனால் குறைந்தபட்ச வசதிகளைக் கூட சரிபார்க்காமல் பிளாட்பாரத்தில் ரெயில் நிறுத்தப்பட்டதை நிரூபித்த நீதிமன்றம், திருப்பதியில் இருந்து துவ்வாடா (வைசாக் மாவட்டம்) செல்லும் போது ஏற்பட்ட சிரமத்திற்காக மூர்த்திக்கு 25,000 இழப்பீடு வழங்க ரெயில்வேக்கு உத்தரவிட்டது. வழக்கிற்கு ஏற்பட்ட செலவுகளுக்காக ஈடுகட்ட கூடுதலாக 5,000 என மொத்தம் ரூ.30,000 வழங்க உத்தரவிட்டது.

## அக்டோபர் மாதத்தில் ரூ.1.87 லட்சம் கோடி ஜிஎஸ்டி வசூல்

புதுடெல்லி, நவ.1

அக்டோபர் மாத ஜி.எஸ்.டி. வருமானம் தொடர்பாக மத்திய நிதி அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையின் விவரம் வருமாறு:

நடப்பு ஆண்டின் அக்டோபர் மாதத்தில் 1 லட்சத்து 87 ஆயிரத்து 346 கோடி ரூபாய் ஜிஎஸ்டி வரி வசூலாகியுள்ளது.

8வது முறையாக மாதந்திர ஜிஎஸ்டி வரி வசூல்ரூ.1.70 லட்சத்திற்கு அதிகமாக உள்ளது.

கடந்த செப்டம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில், அக்டோபர் மாத ஜிஎஸ்டி வசூல் 8.1 சதவீதம் அதிகமாக உள்ளது.

அதேபோல், கடந்த ஆண்டு அக்டோபரில் 1.72 லட்சம் கோடி ரூபாய் ஜிஎஸ்டி வசூலான நிலையில், நடப்பு ஆண்டு அக்டோபர் மாத ஜிஎஸ்டி வசூல் 8.9 சதவீதம் அதிகரித்து 1.87 லட்சம் கோடி ரூபாயாக உள்ளது.

ஜிஎஸ்டி வசூல் அதிகரிப்பு பொருளாதார நடவடிக்கை மற்றும் வரி வசூல் முறை சிறப்பாக செயல்படுவதை வெளிப்படுத்துகிறது என மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## ஜம்முகாஷ்மீர் மாநில பாஜக தலைவரும், எம்எல்ஏவுமான தேவேந்திர சிங் ராணா காலமானார்

மகாராஷ்டிரா, நவ.1

மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங்கின் சகோதரரும், நக்ரோடா எம்எல்ஏவுமான தேவேந்தர் சிங் ராணா, அரியானா மாநிலம் பரிதாபாத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் காலமானார். அவருக்கு வயது 59.

உடல்நலக்குறைவால் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த ராணா சிகிச்சை பலனின்றி உயிரிந்தார். அவருக்கு மனைவி குஞ்சன் ராணா மற்றும் 2 மகள்கள், ஒரு மகன் ஆகியோர் உள்ளனர்.

1965ம் ஆண்டு ஜம்முவின் தோடா மாவட்டத்தில் டோக்ரா குடும்பத்தில் பிறந்த இவர், முன்னாள் அதிகாரி ராஜீந்தர் சிங் ராணாவின் மகனும், மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங்கின் சகோதரரும் ஆவார்.

சிவில் இன்ஜினியரிங் பட்டம் பெற்ற பிறகு, ராணா சொந்தமாக ஆட்டோ மொபைல் நிறுவனத்தை நிறுவி வியாபாரத்தில் இறங்கினார். ஜம்காஷ் வெஹிகிலேட்ஸ் குழுமம் என்ற பல கோடி மதிப்பிலான நிறுவனத்தையும் புதிதாக ஒரு கேபிள் டிவி சேனலையும் உருவாக்கி, ஜம்மு காஷ்மீரில் ஒரு சிறந்த தொழில்முனைவோராக தன்னை நிலைநிறுத்திக் கொண்டார்.

தேசிய மாநாடு கட்சியில் (NC) ராணா தனது அரசியல் வாழ்க்கையைத் தொடங்கினார். உமர் அப்துல்லாவின் நம்பிக்கைக்குரிய உதவியாளராக, ஜம்முவில் கட்சி வியூகங்களை வடிவமைப்பதில் கணிசமான பங்கு வகித்தார். ஜம்மு மற்றும் காஷ்மீர் சட்டமன்றத்திற்கான தனது முதல் முயற்சியில், ராணா நக்ரோட்டா சட்டமன்ற தொகுதியில் பாஜகவை எதிர்த்து போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

2021 அக்டோபரில், இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக NC உடன் இருந்த பிறகு, ராணா ராஜினாமா செய்து பாஜகவில் இணைந்தார். ஜம்மு பகுதியில் உள்ளூர் சமூகங்களுடனான நெருங்கிய தொடர்புகள் அவரை ஜம்மு காஷ்மீர் அரசியலில், குறிப்பாக பிஜேபிக்கு ஒரு முக்கிய நபராக ஆக்கியது.

ராணாவின் மறைவுக்கு அரசியல் தலைவர்கள் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

# 20 சேவைக்கான முத்திரைத்தாள் கட்டணம் உயர்வா? கொதித்த எடப்பாடி.. ஸ்டாலினுக்கு போன டிமாண்ட்'



சென்னை, நவ.1

தமிழகத்தில் 20 வகை சேவைக்கான முத்திரைத்தாள் கட்டணத்தை அரசு உயர்த்தி உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ள நிலையில் அதிமுக பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிச்சாமி கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். ஸ்டாலின் அரசு உடனடியாக இந்த முத்திரைத்தாள் கட்டண உயர்வை திரும்ப பெற வேண்டும் என்று அவர் வலியுறுத்தி உள்ளார்.

தமிழகத்தில் திமுக ஆட்சி வந்தது முதல் பத்திரப்பதிவு கட்டணம் என்பது தொடர்ந்து உயர்த்தப்பட்டு வருகிறது. இதனால் பத்திரப்பதிவு செய்யும் மக்களுக்கு அதிக நிதிச்சுமை ஏற்பட்டுள்ளது.

இது ஒருபுறம் இருக்க தமிழகத்தில் பத்திரப்பதிவு துறையின் 20 வகையான சேவைகளுக்கான முத்திரைத்தாள் கட்டணம் என்பது உயர்த்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அதாவது தமிழக பத்திரப்பதிவு துறையில் வீடு கட்டுமான ஒப்பந்தம், குத்தகை பத்திரம், கிரயம், தானம் மற்றும் செட்டில்மெண்ட் உள்பட 20 வகை சேவைகளுக்கான முத்திரைத்தாள் கட்டணம் என்பது கிடுகிடுவென அதிகரிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இந்த முத்திரைத்தாள் கட்டணம் மூலம் அரசுக்கு வருவாய் என்பது கிடைக்கும்.

இந்நிலையில் தான் தமிழகத்தில் இதுவரை குறைந்தபட்ச கட்டணம் ரூ.20 என இருந்தது. தற்போது அந்த கட்டணம் தற்போது ரூ.100, 200, 500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அதேபோல் உறுதிமொழி ஆவணத்திற்கு ரூ.20 என இருந்த முத்திரைத்தாள் கட்டணம் ரூ.200 வரை அதிகரித்துள்ளது. இப்படி 20 வகை சேவைக்கான முத்திரைத்தாள் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதனை குறிப்பிட்டு எதிர்க்கட்சியினர் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில் எடப்பாடி பழனிச்சாமியும் தமிழக அரசை கண்டித்துள்ளார். பத்திரப்பதிவு துறையின் 20 வகை சேவைகளுக்கான முத்திரைத்தாள் கட்டணத்தை உயர்த்தியதாக வரும் தகவலால் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிச்சாமி கடும் கோபமடைந்துள்ளார். அதுமட்டுமின்றி உடனடியாக முத்திரைத்தாள் கட்டண உயர்வை திரும்ப பெற வேண்டும் என்று அவர் வலியுறுத்தி உள்ளார். இது தொடர்பாக எடப்பாடி பழனிச்சாமி தனது எக்ஸ் பக்கத்தில் கூறியுள்ளதாவது:

இனிமேல் ரு.20 பத்திரம் செல்லாது.. முத்திரைத்தாள் கட்டணம் உயர்வு.. பதிவுத்துறைக்கு தினகரன் கோரிக்கை

□□பத்திரப்பதிவு துறையின் 20 வகையான சேவைகளுக்கான முத்திரைத்தாள் கட்டணத்தை விடியா திமுக அரசு உயர்த்தியுள்ளதாக செய்திகள் வருகின்றன. சொத்து என்ற சாமானியனின் கனவை சாத்தியப்படுத்த உறுதுணையாக இருக்கவேண்டிய அரசே, முத்திரைத் தாள் கட்டண உயர்வு மூலம் முட்டுக்கட்டை போடுவது கடும் கண்டனத்திற்குரியது. தனது நிர்வாகத் திறமையின்மையால் ஏற்படும் பொருளாதார பாரத்தை மக்களின் தலைகளில் ஏற்றும் ஸ்டாலினின் திமுக அரசு, உடனடியாக முத்திரைத் தாள் கட்டண உயர்வைத் திரும்பப் பெற வலியுறுத்துகிறேன்'' என்று கூறியுள்ளார்.

# கிராம தரிசனம்.. தை பிறந்தால் காங்கிரஸுக்கு வழிபிறக்கும்! திமுக ஆட்சியில் பங்கு? செல்வப்பெருந்தகை நச்



சென்னை, நவ.1

தமிழகத்தில் தை பிறந்தவுடன் காங்கிரஸ் கட்சிக்கு வழிபிறக்கும் என்றும் தமிழ்நாட்டில் ஆட்சியில் அதிகாரத்தில் பங்கீடு, வரவிருக்கும் சட்டசபைத் தேர்தலில் மக்களின் முடிவுகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும் என்றும் தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்திருக்கிறார்.

செய்தியாளர்களைச் சந்தித்த தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை விஜய் அரசியல் மற்றும் இந்தியா கூட்டணி குறித்து பேசினார்.. "தற்போது இந்தியா கூட்டணி வலுவாக உள்ளது. யாரெல்லாம் சலனத்தோடு இருக்கிறார்களோ அவர்களுக்கு சலசலப்பை ஏற்படுத்தலாம். நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

விஜய்யின் அரசியல் வருகை எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது. இந்தியா கூட்டணி மேலும் வலுப்பெறவே விஜய்யின் அரசியல் பிரவேசம் உதவும். விஜய்யின் பேச்சால் இந்தியா கூட்டணியில் எந்த சலனமும் இல்லை. விஜய்க்கு மட்டுமே கூட்டம் கூடவில்லை. ராகுல் காந்தி வந்தபோது அதிக கூட்டம் கூடியது.

சட்டசபை தேர்தல்: கூட்டணி குறித்து முடிவெடுக்க வேண்டியது காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய தலைமை. அவர்கள் தான் முடிவெடுப்பார்கள். 2006ல் தமிழ்நாடு சட்டசபை தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை.

அமைச்சரவையில் காங்கிரஸ் கட்சியிடம் பெற இடம் பெறாமல், திமுக ஆட்சி அமைக்க ஆதரவு அளித்தது. அன்றைக்கு தமிழக முதல்வராக கலைஞர் இருக்கவேண்டும் என நிபந்தனையின்றி ஆதரவு கொடுத்தார் சோனியா காந்தி. அன்றைக்கு ஒருவேளை எங்களுக்கு ஆட்சியில் பங்கு வேண்டும் என கேட்டிருந்தால் திமுக கொடுத்திருக்கும்.

உயிரோட்டம்: தமிழகத்தில் காமராஜர் ஆட்சி மீண்டும் கொண்டு வருவோம் என்பதில் உறுதியாக உள்ளோம். கட்சி வலிமையாக இருந்தால், கிராமங்களில் உயிரோட்டமாக இருந்தால் தான் பிற கட்சிகள் எங்களை தேடி வரும். தற்போது, ஆட்சியில் பங்கு, அதிகாரப்பகிர்வு எழுந்துள்ளது. இதை நாங்கள் வரவேற்கிறோம். தமிழ்நாட்டில் ஆட்சியில் அதிகாரத்தில் பங்கீடு வரவிருக்கும் சட்டசபைத் தேர்தலில் மக்களின் முடிவுகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும்.

இன்று மாலை முதல் நாளை மறுநாள் வரை வயநாட்டில் பிரியங்கா காந்தியை ஆதரித்து தமிழக காங்கிரஸ் சார்பில் வாக்கு சேகரிக்க உள்ளோம். இதில், எம்பி., எம்எல்ஏக்கள் கட்சி நிர்வாகிகள் பங்கேற்கிறார்கள். வருகின்ற டிசம்பர் மாதம் 5ம் தேதிக்கு பிறகு காங்கிரஸ் கிராம கமிட்டிகள் சீரமைக்கப்படும். கிராம மக்களின் பிரச்சனைகளை கண்டறிய இயக்கம் நடத்த திட்டமிட்டு உள்ளோம்.

ஆலோசனை : அதைத் தொடர்ந்து கிராம தரிசனம் என்ற பெயரில் கிராமங்கள் நோக்கி செல்கிறோம். எங்கள் தலைவர் கிராம மக்களுடன் தங்கி பணியாற்றுவார்கள். காங்கிரஸில் மாவட்டங்களை பிரிக்க டெல்லி தலைமையுடன் ஆலோசனை நடந்து வருகிறது. இந்தியா கூட்டணியில் எந்த சலனமும், சங்கடமும் இல்லை. தமிழகத்தில் தை பிறந்தவுடன் காங்கிரஸ் கட்சிக்கு வழிபிறக்கும். ஒரே நாடு, ஒரே தேர்தல் முறையை ஒன்றிய அரசு அமல்படுத்தினால் நாட்டில் புரட்சி ஏற்படும்" என்றார் செல்வப்பெருந்தகை

# ரூ.250 கோடி செலவழித்து தேர்தல் தீபாவளி கொண்டாடியுள்ளது திமுக.. தமிழக பாஜக பாய்ச்சல்!

சென்னை, நவ.1

2026 சட்டசபை தேர்தலுக்காக தொண்டர்களை உற்சாகப்படுத்தும் வகையில், தீபாவளிக்காக திமுகவினர் ரூ.250 கோடி செலவு செய்துள்ளதாக தமிழக பாஜக விமர்சித்துள்ளது. தீபாவளி வாழ்த்து சொல்லாத திமுக தலைவர்கள், ஒரு பக்கம் தொண்டர்களுக்கு தீபாவளி பரிசு கொடுக்குமாறு கட்சியினருக்கு கட்டளையிட்டதாக பாஜக விமர்சித்துள்ளது.


இது தொடர்பாக பாஜக மாநில செய்தித் தொடர்பாளர் ஏ.என்.எஸ். பிரசாத் வெளியிட்டுள்ள அறிக்கையில், "கடந்த சில நாட்களுக்கு முன், வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் 200 தொகுதிகளிலும் வெற்றி பெற நாம் அனைவரும் பாடுபட வேண்டும் என்று கூறியதன் அடிப்படையில், சனாதன தர்மத்தை ஒரு பக்கம் எதிர்த்து பேசிக்கொண்டு, இந்து மத பண்டிகைகளுக்கு வாழ்த்து சொல்லாமல் புறக்கணித்து வரும் முதல்வர் ஸ்டாலின் உத்தரவின் பேரில், திமுக கட்சி நிர்வாகிகளுக்கு தமிழகம் முழுக்க தீபாவளி பரிசு பொருட்கள் வாரி வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு சட்டப்பேரவைத் தொகுதியிலும் பூத் கமிட்டி பொறுப்பாளர்கள் உள்ளிட்ட 1 லட்சத்துக்கும் மேற்பட்ட முக்கிய நிர்வாகிகளுக்கு அமைச்சர்கள், மாவட்ட செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டப்பேரவை உறுப்பினர்கள், ஒன்றிய மற்றும் பகுதி செயலாளர்கள், மேயர், சேர்மன் முதல் கவுன்சிலர் வரை ஒவ்வொருவரும் தனித்தனியாக, தீபாவளி பட்டாசு இனிப்புகள், குவார்ட்டர் முதல் மட்டன், சிக்கன் கறி பார்சல் வரை அனைத்தையும் அமோகமாக வழங்கி தீபாவளி திருவிழாவுக்கு தொண்டர்களை உற்சாகப்படுத்துகிறார்கள். இவ்வாறு ரூ.250 கோடிக்கு மேலாக திமுகவினர் செலவு செய்துள்ளனர்.

அதேநேரம், கட்சி தான் குடும்பம், குடும்பம் தான் கட்சி என்று சொல்லக்கூடிய தமிழகம் முதல்வர் ஸ்டாலின் தன்னுடைய கொளத்தூர் தொகுதியில் தன் பங்குக்கு எதுவும் செய்யவில்லை என்று அந்தத் தொகுதி திமுக நிர்வாகிகளிடையே வருத்தம் ஏற்பட்டுள்ளது. அதேநேரம், தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினும் 'நம்பிக்கை உள்ளவர்களுக்கும், கொண்டாடுபவர்களுக்கும் தீபாவளித் திருநாள் வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்' என்று அவருக்கே உரிய வெறுப்பு அரசியல் பாணியில் உற்சாகம் குறைந்து வாழ்த்துகளைக் கூறியுள்ளார்.

சாதி, மத, இன, மொழி பாகுபாடு இன்றி உற்சாகப்படுத்தி மகிழ்வித்து வாழ்த்துகளை பரிமாறுவது தான் தமிழகத்தின் கலாச்சாரம், பண்பாடு, அரசியல் நாகரிகம் என்பதை துணை முதல்வர் உதயநிதி புரிந்து கொள்ள வேண்டும். தேர்தல் அரசியலுக்காக, ஓட்டு அரசியலுக்காக, தன்னுடைய கட்சியின் தொண்டர்களை கட்டிக் காப்பாற்ற, ஏமாற்ற, தீபாவளி பரிசு கொடுத்து உற்சாகப்படுத்த சொல்லி அமைச்சர்களுக்கும் கட்சியினருக்கும் ஒரு பக்கம் கட்டளையிட்டு விட்டு, மறுபக்கம் சிறுபான்மையினரை திருப்திப்படுத்த முதல்வரும் துணை முதல்வரும் போடும் நாடகங்கள் இனி தமிழகத்தில் எடுபடாது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் 17 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு: கன்னியாகுமரி, நெல்லைக்கு எச்சரிக்கை



ஈரோடு, நவ.1

தமிழகத்தில் 17 மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கன முதல் மிக கன மழை பெய்ய வாய்ப்புள்ளது எனவும் எச்சரித்துள்ளது.

மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் ஒரு வளி மண்ட கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. தெற்கு ஆந்திராவை ஒட்டிய தென் மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு வளி மண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக திருநெல்வேலி, கன்னியாகுமரி, நீலகிரி, கோவை, திருப்பூர், ஈரோடு, கரூர், திருச்சி, தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், புதுக்கோட்டை, சிவகங்கை, தென்காசி, தூத்துக்குடி மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் ஒரிரு இடங்கில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசான முதல் மிதமான மழை பெய்யக் கூடும் எனவும் தெரிவித்துள்ளது.

நவம்பர் முதல் வார இறுதியில் தென்மேற்கு வங்கக்கடலில் உருவாகும் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி தீவிரமடைந்து காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெற வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

தமிழகத்தை நோக்கி நகரும் காற்றழுத்தத் தாழ்வு மண்டலத்தால் நவ.711ம் தேதி வரை மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.

# சென்னையில் வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலை உயர்வு



சென்னை, நவ.1

சென்னையில் வணிக பயன்பாட்டுக்கான 19 கிலோ எடை கொண்ட கியாஸ் சிலிண்டர் விலை 61.50 ரூபாய் அதிகரித்து 1964.50 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

சர்வதேச அளவிலான கச்சா எண்ணெய் மற்றும் இந்திய பணத்தின் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் எண்ணெய் நிறுவனங்கள் கியாஸ் விலைகளை நிர்ணயித்து வருகின்றனர். சர்வதேச சந்தைக்கு ஏற்பட்ட தினந்தோறும் பெட்ரோல், டீசல் விலைகளை நிர்ணயித்து வருகிறது. கியாஸ் சிலிண்டர்கள் விலை மாதத்திற்கு ஒரு முறை மாற்றியமைக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் பெட்ரோல், டீசல் மற்றும் வீட்டு பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலையில் கடந்த பல மாதங்களாக மாற்றம் செய்யப்படாமல் உள்ளது. வணிக பயன்பாட்டுக்கான கியாஸ் சிலிண்டர் விலை மட்டும் அடிக்கடி உயர்த்தப்படுகிறது.

சிலிண்டர் விலையில் சென்னை, டெல்லி, மும்பை, கொல்கத்தா போன்ற நகரங்களுக்கு ஏற்ப ஏற்றம் இறக்கம் இருக்கும்.

14 கிலோ எடை கொண்ட வீட்டு உபயோக சிலிண்டர் விலை மாற்றமின்றி 818 ரூபாய் 50 காசுகள் என்ற நிலையில் நீடிக்கிறது.

# மருத்துவ காப்பீட்டு திட்டம்: மூத்த குடிமக்களின் வயதை குறைக்க வேண்டும் திருமாவளவன்



சென்னை, நவ.1

70 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கு 5 லட்ச ரூபாய் வரை மருத்துவக் காப்பீடு அளிக்கும் பி.எம்.ஜெய் திட்டத்தை பிரதமர் மோடி துவக்கி வைத்தார். அந்தத் திட்டத்தின் வயது வரம்பை 60 ஆக குறைக்க வேண்டும் என்று பிரதமர் மோடிக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் கடிதம் எழுதியுள்ளார். அந்த கடிதத்தில் அவர் தெரிவித்திருப்பதாவது:

2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 10.4 கோடி பேர் 60 வயதைக் கடந்தவர்கள் இந்தியாவில் உள்ளனர் என்று தெரியவந்தது. கடந்த 13 ஆண்டுகளில் அந்த எண்ணிக்கை மேலும் அதிகரித்திருக்கும். 70 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கான இந்த சலுகையை 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவருக்கும் விரிவுபடுத்தினால் பரவலாகப் பலர் இதில் பயன் பெற முடியும்.

தற்போதைய திட்டத்தில் 5 லட்சம் வரை சிகிச்சை பெறலாம் என்று கூறப்பட்டுள்ளது. அதிகரித்துவரும் மருத்துவ செலவினங்களைக் கருத்தில் கொண்டு இதை 10 லட்சம் ஆக உயர்த்த வேண்டும்.

மூத்த குடிமக்களின் மக்கள் தொகையில் 71% கிராமப்புறங்களில் உள்ளனர். அவர்களில் பெண்களின் எண்ணிக்கை அதிகம். ஒப்பீட்டளவில் கிராமப்புறங்களில் மருத்துவ வசதியும் குறைவாக உள்ளது. இதைக் கருத்தில் கொண்டு இந்தத் திட்டத்தில் கிராமப்புறப் பெண்களுக்குக் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

மூத்த குடிமக்களிலேயே மாற்றுத்திறனாளிகள் மிகவும் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போதைய மூத்த குடிமக்களின் எண்ணிக்கையில் ஒரு லட்சம் பேருக்கு 5,177 மாற்றுத்திறனாளிகள் உள்ளனர் என்று கணக்கெடுக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கெனக் குறிப்பான திட்டம் வகுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# காரியாபட்டியில் பட்டாசு வெடித்து பயங்கர தீ விபத்து




விருதுநகர், நவ.1

விருதுநகர் மாவட்டம் காரியாபட்டியில் பழைய இரும்பு, பிளாஸ்டிக் பொருட்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்த இடத்திற்கு அருகில் சிலர் பட்டாசுகளை வெடித்துள்ளனர். இதில் பட்டாசு சிதறி சேமிப்பு கிடங்கின் மீது விழுந்ததில், அங்கிருந்த கழிவு அட்டைப் பொருட்கள் தீப்பற்றி எரிய தொடங்கியுள்ளது. மேலும் காற்றின் வேகம் காரணமாக தீ மளமளவென பரவியது.

இது குறித்து அப்பகுதி மக்கள் தீயணைப்புத்துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். இந்த தீ விபத்து காரணமாக அச்சம்பட்டி பகுதி முழுவதும் புகை மண்டலமாக காட்சியளித்தது. இதனிடையே குறுகிய சாலை வழியாக தீயணைப்பு வாகனம் நுழையமுடியாததால், தீயணைப்பு வீரர்கள், போலீசார் மற்றும் பொது மக்கள்

இணைந்து தண்ணீரை ஊற்றி தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

# தீபாவளிக்கு குட்டி பிரேக்.. சென்னை புறநகர் பகுதிகளில் கனமழை



சென்னை, நவ.1

கிழக்கு திசை காற்று தென் இந்திய பகுதிகளில் முழுமையாக வீச இருக்கிறது. இதனால் வருகிற 5ந்தேதி முதல் பருவமழை தீவிரம் அடைய உள்ளது.

அதற்கு முன்னதாக மன்னார் வளைகுடா பகுதிகளில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி, தெற்கு ஆந்திர கடலோரப் பகுதிகளையொட்டிய பகுதிகளில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி ஆகியவை காரணமாக இன்று (வியாழக்கிழமை) முதல் 2ந்தேதி வரை மழைக்கான வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

அதன்படி, தமிழ்நாட்டில் சில இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் மிதமான மழையும், திண்டுக்கல், மதுரை, திருச்சி,

கரூர், நாமக்கல், சேலம், ஈரோடு, தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, அரியலூர், பெரம்பலூர் ஆகிய 15 மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கனமழையும் பெய்யக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்து

இருந்தது. அந்த வகையில், சென்னை புறநகர் பகுதிகளான காட்டுப்பாக்கம், பூந்தமல்லி, குமணன் சாவடி, வேலப்பன்சாவடி, திருவேற்காடு, கோவூர் உள்ளிட்ட பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. இதே போல் எழும்பூர், புரசைவாக்கம், வேப்பேரி பகுதிகளிலும் கனமழை பெய்கிறது.

# தீபாவளி அன்று சற்று உயர்ந்தது இன்றைய தங்கம், வெள்ளி விலை நிலவரம்

சென்னை, நவ.1

தங்கம் விலை கடந்த சில நாட்களாகவே ஒரு நாள் உயர்வதும், மறுநாள் குறைவதுமாக ஒரு நிலையற்ற தன்மையிலேயே பயணித்து கொண்டிருக்கிறது. சென்னையில் நேற்று முன்தினம் கிராம் ரூ.7,315க்கும், ஒருபவுன் ரூ.58,520க்கும் விற்பனை ஆனது.

தங்கம் விலை நேற்று சற்று அதிகரித்தது. தங்கம் விலை சவரனுக்கு ரூ.50 அதிகரித்து ரூ.59 ஆயிரத்து 520க்கு விற்பனை செய்யப்பட்டது. கிராமுக்கு ரூ.65 அதிகரித்து ரூ.7,440க்கு விற்பனை செய்யப்பட்டது.

இந்நிலையில் சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று சவரனுக்கு ரூ.120 உயர்ந்து ரூ.59,640க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.15 உயர்ந்து ரூ.7,455க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலை மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.109க்கு விற்பனை செய்யப்படுகிறது.

# விஜயின் த.வெ.க. மாநாடு மிகப்பெரிய வெற்றி ரஜினிகாந்த்



சென்னை, நவ.1

தமிழ்நாட்டில் இன்று தீபாவளி பண்டிகை கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது. பொது மக்கள் புத்தாடை அணிந்து,

இனிப்புகள் உண்டு, பட்டாசுகளை வெடித்து தீபாவளி பண்டிகையை கொண்டாடி வருகின்றனர்.

தீபாவளி பண்டிகையை ஒட்டி நடிகர் ரஜினிகாந்த் வீட்டு வாசலில் ஏராளமான ரசிகர்கள் திரண்டனர். வீட்டு வாசலில் திரண்ட ரசிகர்களுக்கு நடிகர் ரஜினிகாந்த் தீபாவளி வாழ்த்து தெரிவித்தார். உற்சாகமாக காணப்பட்ட நடிகர் ரஜினிகாந்த் வாழ்த்து தெரிவித்த பிறகு செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது பேசிய அவர், "அனைவருக்கும் என்னுடைய தீபாவளி நல் வாழ்த்துக்கள். எல்லோரும் மகிழ்ச்சியாக, ஆரோக்கியமாக, சந்தோஷமாக இருக்க வேண்டும்." நடிகர் விஜயின் மாநாடு பற்றிய கேள்விக்கு, "மாநாடு உண்மையில் மிகப்பெரிய வெற்றி பெற்றுள்ளது. அவருக்கு என்னுடைய வாழ்த்துக்கள்," என்று தெரிவித்தார்.

# தீபாவளி பண்டிகை: தீ விபத்தை தடுக்க தயார் நிலையில் 1,100 தீயணைப்பு வீரர்கள் தீயணைப்புத்துறை தகவல்



சென்னை, நவ.1

தீபாவளி பண்டிகை கொண்டாடப்படுகிறது. தீபாவளியை கொண்டாட கடந்த சில நாட்களாகவே அனைவரும் புத்தாடை மற்றும் பட்டாசுகளை வாங்கிவைத்துக்கொண்டு தயார் நிலையில் இருந்தனர்.

காலை முதலே புத்தாடை உடுத்தி, பட்டாசு வெடிக்க தொடங்கி விட்டனர்.. பட்டாசு வெடிக்க 2 மணி நேரம் மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், தீபாவளி பண்டிகை அன்று அனைத்து பகுதிகளிலும் பட்டாசு வெடிக்கும் சத்தம் கேட்டு கொண்டேதான் இருக்கும்.

இதுபோன்ற நேரங்களில் தீ விபத்து ஏற்பட அதிக அளவு வாய்ப்பு உள்ளது. ஆண்டுதோறும் சில இடங்களில் தீ விபத்து ஏற்படுவது தடுக்க முடியாத ஒன்றாக உள்ளது. எனவே, இந்த ஆண்டு தீ விபத்து போன்ற அசம்பாவிதங்களை தடுக்க தீயணைப்பு துறையினர் உஷார்படுத்தப்பட்டுள்ளனர்.

தமிழகம் முழுவதும் உள்ள தீயணைப்பு நிலையங்களில் பணியாற்றும் தீயணைப்பு வீரர்கள் அனைவருக்கும் நேற்று முன்தினம் முதலே பணிகள் ஒதுக்கி கொடுக்கப்பட்டு, தங்களுக்கான இடங்களில் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். சென்னையில் உள்ள 43 தீயணைப்பு நிலையங்களில் பணியாற்றும் 800 தீயணைப்பு வீரர்களும், கூடுதலாக வெளி மாவட்டங்களில் இருந்து 21 தீயணைப்பு வண்டிகளில் 300 பேரும் என 1,100 தீயணைப்பு வீரர்கள் தீபாவளி தீ விபத்தை தடுப்பதற்கு தயார் நிலையில் உள்ளனர்.

இவர்கள் அனைவரும் சென்னையில் முக்கியமானதாக கருதப்படும் 64 பகுதிகளில் தயார் நிலையில் உள்ளனர். அதில் வெளிமாவட்டங்களில் இருந்து வந்த 21 தீயணைப்பு வாகனங்கள் மற்றும் வீரர்கள் முக்கிய பஸ் நிலையம், பூங்கா, மண்டபம் போன்ற பகுதிகளில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் மாலை 5 மணி முதலே தீயணைப்பு வீரர்கள் பணியில் ஈடுபடத்தொடங்கியுள்ளனர். தீபாவளி பண்டிகையை தொடர்ந்து அதற்கு அடுத்த நாளும் தொடர்ச்சியாக பட்டாசுகள் வெடிப்பார்கள். இதனை கருத்தில் கொண்டு வரும் 2ந்தேதி வரையில் தீயணைப்பு வீரர்கள் தீ விபத்தை தடுக்க பணிகளில் ஈடுபடுகிறார்கள்.

மேலும், தீபாவளி பண்டிகைக்கு முன்பாகவே, தமிழகம் முழுவதும் பள்ளி, கல்லூரி மற்றும் பொது இடங்களில் பாதுகாப்பான முறையில் பட்டாசு வெடிப்பது எப்படி? என்பது பற்றி பல்வேறு விழிப்புணர்வுகள் மற்றும் துண்டு பிரசுரங்களை தீயணைப்பு துறையினர் வினியோகித்துள்ளார்கள். அதன்படி, பாதுகாப்பான முறையில் தீபாவளியை மகிழ்ச்சியோடு கொண்டாட வேண்டும் என போலீசார் மற்றும் தீயணைப்பு துறையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# நெல்லையில் கோஷ்டி மோதலில் தொழிலாளி வெட்டிக்கொலை: 4 பேருக்கு அரிவாள் வெட்டு

நெல்லை, நவ. 1

நெல்லையை அடுத்த பேட்டை அருகே உள்ள மலையாளமேடு உடையவர் தெருவை சேர்ந்தவர் பரமசிவம்(வயது 50). இவரது மகன் மாரிசெல்வன். அதே பகுதியில் வசித்து வருபவர் மண்டையன் பெருமாள். தொழிலாளி.

இவர் மீது கொலை உள்ளிட்ட பல்வேறு வழக்குகள் நிலுவையில் இருக்கிறது. இவரது பெயர் ரவுடிகள் பட்டியலில் வைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறார்.

இவரது மகன்கள் மருது என்ற சுடலைமணி(வயது 27), லெட்சுமணன், கொம்பையா என்ற கார்த்தி(20). இதில் சுடலைமணி டிரைவராகவும், மற்ற 2 பேரும் விவசாய தொழிலாளிகளாகவும் இருந்து வருகின்றனர். இந்நிலையில் சமீப காலமாக பரமசிவம் குடும்பத்தினருக்கும், மண்டையன் பெருமாள் குடும்பத்தினருக்கும் இடையே முன்விரோதம் இருந்து வருகிறது. அடிக்கடி ஒருவரையொருவர் முறைத்து பார்த்து கொள்வதும், பின்னர் வாக்குவாதத்தில் ஈடுபடுவதுமாக இருந்து வந்துள்ளனர். சில நாட்களுக்கு முன்பு மீண்டும் அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று இரவு பரமசிவம் சாப்பிட்டு முடித்துவிட்டு காற்று வாங்குவதற்காக வீட்டை விட்டு வெளியே தனது மகன் மாரிசெல்வத்துடன் தெருவில் நின்று பேசிக்கொண்டிருந்தார். அவரது உறவினரான விக்கி என்பவரும் அவர்களுடன் நின்றார். அப்போது 2 மோட்டார் சைக்கிளில் மண்டையன் பெருமாளின் மகன்கள் மருது, கார்த்தி, லெட்சுமணன் மற்றும் அவரது மருமகன் முருகபெருமாள் ஆகியோர் அங்கு வந்துள்ளனர்.

தொடர்ந்து 2 தரப்பினரும் வாக்குவாதத்தில் ஈடுபட்ட நிலையில், மருதுவும், கார்த்திக்கும் சேர்ந்து பரமசிவத்தை சரமாரியாக அரிவாளால் வெட்டியதாக கூறப்படுகிறது. இதனை தடுக்க முயன்ற அவரது மகன் மாரிசெல்வனுக்கும், விக்கிக்கும் வெட்டு விழுந்தது. இதனிடையே பதிலுக்கு மாரிசெல்வன் அரிவாளால் வெட்டியதில், முருகபெருமாளுக்கு வெட்டு விழுந்தது.

இதனை கேள்விப்பட்டு அங்கு வந்த மண்டையன் பெருமாளுக்கும் அரிவாள் வெட்டு விழுந்ததாக கூறப்படுகிறது. இந்த சம்பவத்தில் பலத்த வெட்டுக்காயம் அடைந்த பரமசிவம் சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் துடிதுடித்து இறந்தார். தகவல் அறிந்து அங்கு விரைந்து வந்த பேட்டை போலீசார் பரமசிவம் உடலை மீட்டு நெல்லை அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். வெட்டுக்காயம் அடைந்த 4 பேருக்கும் நெல்லை அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. கோஷ்டி மோதலில் நடந்த அரிவாள் வெட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்த நிலையில் 4 பேர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருவதால் அப்பகுதியில் பதற்றம் நிலவி வருகிறது. இதனால் அங்கு மாநகர போலீஸ் கமிஷனர் ரூபேஷ்குமார் மீனா உத்தரவின்பேரில் துணை கமிஷனர் கீதா மேற்பார்வையில் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

# இந்திய விடுதலைக்காகக் காத்திரமாகக் களமாடியவர் பசும்பொன் தேவரை புகழ்ந்த விஜய்



சென்னை, நவ.1

தமிழக வெற்றிக்கழகத் தலைவர் விஜய் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

அய்யா பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகனார். இந்திய விடுதலைக்காகக் காத்திரமாகக் களமாடியவர். மாவீரர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் படையை வலுப்படுத்தத்துணை நின்றவர்.

பாராளுமன்ற, சட்டமன்ற அரசியலில் முத்திரை பதித்த பேச்சுக் கலைப்பேரரசர். சமூக நல்லிணக்கம் பேணியவர். தமிழக அரசியலின் முக்கிய அடையாளங்களில் ஒருவராகவும் மாறிய, மகத்தான மனிதரை அவரது குருபூஜைத் திருநாளில் வணங்கி வாழ்த்திப் போற்றுவோம் என கூறியுள்ளார்.

# விபத்து, ஒலி மற்றும் மாசற்ற தீபாவளியை கொண்டாட பொதுமக்களுக்கு தமிழக அரசு வேண்டுகோள்



சென்னை, நவ.1

தீபாவளி பண்டிகை கொண்டாடபபட உள்ள நிலையில், விபத்து, ஒலி மற்றும் மாசு இல்லாத பாதுகாப்பான தீபாவளியை பொதுமக்கள் கொண்டாட வேண்டும் எனதமிழக அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது. இது தொடர்பான பல்வேறு அறிவுறுத்தல்களை தமிழக அரசு வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது;

"தீபாவளி திருநாள் மக்களால் மகிழ்ச்சியுடன் கொண்டாடப்படும் திருநாளாகும். இத்திருநாளில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பட்டாசுகளை வெடித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்துவார்கள். அதேவேளையில், பட்டாசுகளைவெடிப்பதால்நம்மை சுற்றியுள்ள நிலம், நீர், காற்று உள்ளிட்டவை பெருமளவில் மாசுபடுகின்றன.

பட்டாசு வெடிப்பதால் எழும் அதிகப்படியான ஒலி மற்றும் காற்று மாசினால் சிறு குழந்தைகள், வயதான பெரியோர்கள் மற்றும் நோய்வாய்பட்டுள்ள வயோதிகர்கள் உடல் அளவிலும் மனதளவிலும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். பட்டாசு உற்பத்தி மற்றும் விற்பனைக்கு தடை கோரி சுப்ரீம் கோர்ட்டில் தொடரப்பட்ட பொது நல வழக்கில், சுப்ரீம் கோர்ட்டுதனது 23.10.2018 ஆம் நாளிட்ட ஆணையில், சுற்றுச்சூழலுக்கு உகந்த மூலப்பொருட்களை பயன்படுத்தி பட்டாசுகளை உற்பத்தி செய்ய வேண்டும் எனவும், வருங்காலத்தில் பசுமைப் பட்டாசுகளை உற்பத்தி செய்து விற்பனை செய்ய வேண்டும் எனவும் நிபந்தனைகளை விதித்தது.

மேலும், சுப்ரீம் கோர்ட்டு தனது ஆணையில், பட்டாசுகளை வெடிப்பதால் காற்றின் தரம் பாதிக்கப்படுவது குறித்து போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் எனவும், திறந்த வெளியில் குறிப்பிடப்பட்ட பகுதிகளில் மட்டுமே பட்டாசுகளை வெடிக்க மாநில அரசுகள்வலியுறுத்தவேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளது.

சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு கடந்த நான்கு ஆண்டுகளாக தீபாவளி பண்டிகையன்று காலை 6 முதல் 7 மணி வரையும், இரவு 7 முதல் 8 மணி வரையில் மட்டுமே ஒலி எழுப்பும் பட்டாசுகளை வெடிப்பதற்கு நேரம் நிர்ணயம் செய்து அனுமதி வழங்கியது. இந்த ஆண்டும் தீபாவளிபண்டிகைதினத்தன்று, கடந்த ஆண்டைப் போலவே காலை 6 முதல் 7 மணி வரையிலும், இரவு 7 முதல் 8 மணி வரை மட்டுமேபட்டாசுகளைவெடிக்கவேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், பட்டாசுகளை வெடிப்பதால் ஏற்படும் சுற்றுச்சூழல் சீர்கேடு குறித்தும் உடல் நலனில் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், போதிய அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பல நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. சுற்றுச்சூழலை பாதிப்பு இல்லாமல் பேணிக் காப்பது நம் ஒவ்வொருவரின் கடமையும் பொறுப்பும் ஆகும். இதனை கருத்தில் கொண்டு, பொதுமக்கள் கீழ்கண்டவற்றைக் கடைப்பிடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் :

பாதுகாப்பான தீபாவளி கொண்டாடுவதற்கு பொது மக்கள் கடைப்பிடிக்க வேண்டியவை:

1.பொதுமக்கள் குறைந்த ஒலியுடனும், குறைந்த அளவில் காற்று மாசுபடுத்தும் தன்மையும் கொண்ட பசுமை பட்டாசுகளை மட்டுமே வெடிக்க வேண்டும்.

2.மாவட்ட நிர்வாகம் / உள்ளாட்சி அமைப்புகளின் முன்அனுமதியுடன், பொதுமக்கள் திறந்த வெளியில் ஒன்று கூடி கூட்டாக பட்டாசுகளை வெடிப்பதற்கு அந்தந்த பகுதிகளில் உள்ள நலச் சங்கங்கள்மூலம்முயற்சிக்க வேண்டும்.

தவிர்க்க வேண்டியவை:

1.அதிக ஒலி எழுப்பும் மற்றும் தொடர்ச்சியாக வெடிக்க கூடிய சரவெடிகளை தவிர்க்க வேண்டும்.

2.மருத்துவமனைகள், பள்ளிகள், நீதிமன்றங்கள் வழிபாட்டுத் தலங்கள் போன்ற அமைதி காக்கப்படும் இடங்களில் பட்டாசுகள் வெடிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

3.குடிசை பகுதிகள் மற்றும் எளிதில் தீப்பற்றக் கூடிய இடங்களுக்கு அருகில் பட்டாசு வெடிப்பதை தவிர்க்க வேண்டும்.

ஆகவே, பொதுமக்கள் சுற்றுச் சூழலுக்கு அதிக மாசு ஏற்படுத்தாத பட்டாசுகளை அரசு அனுமதித்துள்ள நேரத்தில் உரிய இடங்களில் கூட்டாக வெடித்து மாசற்ற தீபாவளியை கொண்டாடுமாறு தமிழ்நாடு அரசு மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அனைவருக்கும் இதயங் கனிந்த மாசற்ற தீபாவளி நல் வாழ்த்துகள்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னையின் பல்வேறு பகுதிகளில் கனமழை தீபாவளி வர்த்தகம் கடும் பாதிப்பு

சென்னை, நவ.1

மன்னார் வளைகுடா பகுதிகளில் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. தெற்கு ஆந்திர கடலோரப்பகுதிகளை ஒட்டிய பகுதிகளில் ஒருவளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக சென்னை உள்பட தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, சென்னையின் பல்வேறு பகுதிகளில் இன்று மதியம் கனமழை பெய்தது.

எழும்பூர், நுங்கம்பக்கம், கோடம்பாக்கம், தி.நகர், கிண்டி, கோயம்பேடு, சைதாப்பேட்டை, வேளச்சேரி, குரோம்பேட்டை உள்பட பல்வேறு பகுதிகளில் கனமழை வெளுத்து வாங்கியது.

இந்நிலையில், கனமழையால் தீபாவளி வர்த்தகம் கடும் பாதிப்பை சந்தித்துள்ளது. நாளை தீபாவளி கொண்டாடபபட உள்ள நிலையில் பட்டாசு, துணி, பூக்கள், காய்கறி, இனிப்பு வகைகள் உள்படவற்றின் வியாபாரம் இன்று அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

தி.நகரில் உள்ள கடைகளில் பட்டாசு, இனிப்புகள், புதுத்துணி உள்பட பல்வேறு பொருட்களைவாங்க மாலை மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், கனமழையால் பொருட்களை வாங்க வரும் மக்கள் கூட்டம் குறைந்துள்ளது.

கனமழையால் தி.நகரில் மக்கள் கூட்டம் குறைவாக உள்ளது. கனமழையால் தீபாவளி விற்பனை மந்தமாக நடைபெறுவதால் வியாபாரிகள் கவலையடைந்துள்ளனர்.

# சென்னையில் தீபாவளி பண்டிகை களைகட்டியது: தீ விபத்துக்களை தடுக்க 70 இடங்களில் ஏற்பாடு



சென்னை, நவ.1

தீபாவளி பண்டிகை நாளை கொண்டாடப்படுவதையொட்டி தமிழகம் முழுவதும் போலீசாரும், தீயணைப்பு வீரர்களும் உஷார்படுத்தப்பட்டுள்ளனர்.

தீபாவளிக்கு புத்தாடை, இனிப்பு வகைகள், பட்டாசுகள் ஆகியவற்றை வாங்குவதற்காக கடந்த 3 நாட்களாகவே கடை வீதிகளில் மக்கள் கூட்டம் அலைமோதி வருகிறது. இன்று தீபாவளிக்கு முந்தைய நாள் என்பதால் பொருட்களை வாங்கும் இறுதிக் கட்ட பணிகளில் பொது மக்கள் ஆர்வம் காட்டினார்கள்.

காலையில் இருந்து தமிழகம் முழுவதும் முக்கிய கடை வீதிகளில் மற்றும் வணிக பகுதிகளில் மக்கள் கூட்டம்அதிகமாக காணப்பட்டது. சென்னையில் தி.நகர், பாரிமுனை, வண்ணாரப்பேட்டை, புரசைவாக்கம் உள்ளிட்ட வணிக பகுதிகளில் பெரிய கடைகள் முதல் சாலையோர சிறிய கடைகள் வரை அனைத்து இடங்களிலும் பொதுமக்கள் தீபாவளி இனிப்புகள், பட்டாசுகள் புத்தாடை ஆகியவற்றை வாங்கி மகிழ்ந்தனர்.

இதனால் கடைவீதிகளில் களை கட்டி காணப்பட்டது. இதையொட்டி சென்னை உள்பட அனைத்து மாவட்டங்களிலும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டு போலீசார் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

தீபாவளி பண்டிகையை சொந்த ஊர்களில் கொண்டாடுவதற்கும் மக்கள் படையெடுத்தனர். வெளியூர்களுக்கு செல்லும் பயணிகளின் வசதிக்காக சென்னையில் இருந்து நேற்று முன்தினம் முதல் சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

இந்த பஸ்களில் பொது மக்கள் முண்டியடித்து கொண்டு ஏறி தங்களது சொந்த ஊர்களுக்கு பயணம் மேற்கொண்டார்கள். நேற்று மட்டும் 2 லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் சென்னையில் இருந்து வெளியூர்களுக்கு புறப்பட்டு சென்றனர்.

இதனால் வண்டலூர் கிளாம்பாக்கம் பஸ் நிலையம் மக்கள் வெள்ளத்தில் மிதந்தது. 2 நாட்களில் 3½ லட்சம் பேர் அரசு பஸ்களில் மட்டும் பயணம் செய்து சொந்த ஊர்களை சென்றடைந்துள்ள நிலையில் இன்றும் லட்சக்கணக்கான மக்கள் பயணம் மேற்கொண்டனர்.

இதேபோன்று வெளி மாவட்டங்களில் இருந்தும் தங்களது சொந்த ஊர்களுக்கு மக்கள் பயணித்தனர். ரெயில்களிலும் மக்கள் கூட்டம் அலைமோதியது.

இதனால் சென்னை உள்பட அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ரெயில் நிலையங்கள், பஸ் நிலையங்களில் போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். சென்னையில் 18 ஆயிரம் போலீசாரும், தமிழகம் முழுவதும் 48 ஆயிரம் போலீசாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கூட்ட நெரிசலை பயன்படுத்தி பிக்பாக்கெட், திருட்டு செயின் பறிப்பு போன்ற குற்றச் செயல்கள் நடைபெறாமல் தடுப்பதற்காக சாதாரண உடையில் போலீசார் கண்காணித்து வருகிறார்கள். குறிப்பாக தி.நகர் ரங்கநாதன் தெருவில் உச்சக்கட்ட பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

தீபாவளியையொட்டி பட்டாசுகளை வெடிப்பதிலேயே மக்கள் அதிக ஆர்வம் காட்டுவார்கள். 2 மணி நேரம் மட்டுமே பட்டாசு வெடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும் அதனை பொருட்படுத்தாமல் தொடர்ச்சியாக பட்டாசு வெடிப்பார்கள்.

இதுபோன்ற நேரங்களில் ராக்கெட் பட்டாசுகள் பறந்து சென்று குடிசை வீடுகள் தீப்பற்றிக் கொள்வது ஒவ்வொரு தீபாவளி பண்டிகையின் போதும் தவிர்க்க முடியாததாகவே இருந்து வருகிறது. இந்த ஆண்டும் அதுபோன்று தீவிபத்து ஏற்பட வாய்ப்பு இருப்பதால் தீயணைப்பு வீரர்கள் உஷார்படுத்தப்பட்டுள்ளனர்.

தமிழகம் முழுவதும் உள்ள தீயணைப்பு நிலையங்களில் பணியாற்றும் தீயணைப்பு வீரர்கள் அனைவருக்கும் நேற்று மாலையில் இருந்தே பணிகள் ஒதுக்கி கொடுக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் சென்னையில் 1100 தீயணைப்பு வீரர்கள் தீபாவளி தீ விபத்தை தடுப்பதற்காக தயார் நிலையில் இருக்கிறார்கள். சென்னையில் உள்ள 43 தீயணைப்பு நிலையங்களிலும் 800 பேர் பணியாற்றி வரும் நிலையில், வெளி மாவட்டங்களில் இருந்து 21 தீயணைப்பு வண்டிகளில் 300 பேர் வந்துள்ளனர்.

இவர்களோடு சேர்ந்து மொத்தம் 1100 தீயணைப்பு வீரர்கள் 70 இடங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 5 மணியில் இருந்தே தீயணைப்பு வண்டிகளுடன் தீபாவளி தீதடுப்பு பணிகள் தொடங்கியுள்ள தீயணைப்பு வீரர்கள் வருகிற 2ந் தேதி காலை வரையில் பணியில் நீடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தீபாவளி பண்டிகைக்கு மறுநாள் 1ந் தேதி முழுவதுமே பலரும் பட்டாசுகளை வெடிப்பார்கள். இதனை கருத்தில் கொண்டே 2ந் தேதி இரவு வரையில் தீயணைப்பு வீரர்கள் தீ விபத்தை தடுக்கும் பணிகளில் ஈடுபடுகிறார்கள்.

பாதுகாப்பான முறையில் பட்டாசுகளை வெடிப்பது எப்படி ? என்பது பற்றி தமிழகம் முழுவதும் பள்ளி கல்லூரிகளில் விழிப்புணர்வு ஏற்படுத்தி துண்டு பிரசுரங்களை வினியோகித்துள்ளோம். எனவே குழந்தைகள், பள்ளி கல்லூரி மாணவமாணவிகள் பாதுகாப்பான முறையில் பட்டாசுகளை வெடித்து தீபாவளியை மகிழ்ச்சியோடு கொண்டாட வேண்டும் என்று போலீசாரும் தீயணைப்பு துரையினரும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# ஆட்சியில் பங்கு குறித்து கட்சி தலைமை முடிவெடுக்கும் திருநாவுக்கரசர் பேச்சு



மதுரை, நவ.1

தேவர் ஜெயந்தி முன்னிட்டு மதுரை கோரிப்பாளையத்தில் உள்ள தேவர் சிலைக்கு மதுரை மாநகர் மாவட்ட காங்கிரஸ் தலைவர் கார்த்திகேயன் தலைமையில் காங்கிரஸ் கட்சி சார்பில் மாநில முன்னாள் தலைவர் திருநாவுக்கரசர் கலந்து கொண்டு தேவரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அப்போது அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

நடிகர் விஜய் புதிதாக கட்சி ஆரம்பித்து புதிதாக மாநாடு நடத்தி இருக்கிறார். தமிழகத்தில் சிறந்த நடிகர்களில் நல்ல நடிகர் அவர். அதிக சம்பளம் வாங்கக்கூடிய நடிகர் விஜய் நடத்திய மாநாட்டிற்கு எனது வாழ்த்துக்கள்.

தற்போது தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் கட்சி உள்ளது. சட்டமன்றத் தேர்தல், பாராளுமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் இருந்து பணியாற்றி வருகிறோம். நடிகர் விஜய் கூட்டணியோ அல்லது அரசாங்கத்தில் பங்கு என்ற கோஷம் மகிழ்ச்சி அளிக்கக் கூடியது தான்.

அரசியல் கட்சி நடத்துபவர்கள்அந்த கூட்டணியில் ஆட்சியில் பங்கு என்று வந்தால் கூட்டணியில் உள்ளவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். காரணம் அந்த அதிகார பங்கை வைத்து மக்களுக்கு சிறந்த முறையில் சேவை செய்ய முடியும் என்பதால் தான்.

ஆனால் பெரும்பான்மையாக ஒரு கட்சி வெற்றி பெற்றால் கூட்டணி கட்சிக்கு பங்களிக்க வேண்டும் என்பது கட்டாயம் இல்லை.

ஆனால் ஆந்திராவில் பெரும்பான்மை இருந்தாலும் பவன் கல்யாணத்துக்கு துணை முதல்வர் பதவி வழங்கியிருக்கிறார்கள். எனவே ஆட்சியில் பங்கு என்பது கட்சி தலைமை எடுக்க வேண்டிய முடிவு. அது வெற்றி பெறும் எண்ணிக்கையை பொறுத்தது. இவ்வாறு அவர் கூறினார்.

இந்த பேட்டியின்போது பறக்கும் படை பாலு, வெங்கட்ராமன், மலர் பாண்டியன் உள்பட பலர் உடன் இருந்தனர்.

# மீனவர் பிரச்சனைக்கு தீர்வுகாண பேசி வருகிறோம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நிருபர்களுக்கு பேட்டி



சென்னை, நவ.1

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் நினைவிடத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

பேரறிஞர் அண்ணா, கலைஞர் ஆகியோர் தேவர் திருமகனார் பற்றி சொன்னதை பெருமைப்படுத்தி குறிப்பிட்டதை நான் உங்களுக்கு நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

அன்றைய அறம் வளர்த்த பாண்டிய மன்னர்களின் ஒருமித்த இளவல் மாதிரி கம்பீரமாக காட்சியளித்தார், தேவர் திருமகனார் என அண்ணா புகழ்ந்துரைத்துள்ளார்.

அதேபோல் கலைஞர் சொன்னது, வீரராக பிறந்தார். வீரராக வாழ்ந்தார். வீரராக மறைந்தார். அவர் மறைந்ததற்கு பிறகும் இன்றைக்கும் வீரராக அவர் போற்றப்படுகிறார் என்று கலைஞர் அவரைப் பற்றி புகழ்ந்து பேசிஇருக்கிறார்.

அத்தகைய தியாகியை போற்றக்கூடிய அரசாக திராவிட முன்னேற்ற கழக அரசு செயல்பட்டு வருகிறது என்பது அனைவருக்கும் ஒன்றாக தெரியும்.

பசும்பொன் தேவரை பற்றி கழக அரசு செய்திருக்க கூடிய பல்வேறு செயல்பாடுகளில் சிலவற்றை குறிப்பிடுகிறேன்.

மதுரை மாநகரில் மாபெரும் வெண்கலசிலை, பசும்பொன் மண்ணில் நினைவில்லம், மேல்நீலித நல்லூர் கமுதி, உசிலம்பட்டி ஆகிய இடங்களில் 3 அரசு கலைக்கல்லூரிகள், மதுரை ஆண்டாள்புரத்தில் முத்துராமலிங்க தேவர் பாலம் என்று பெயரிட்டோம்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் கல்வி அறக்கட்டளை மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் சீர்மரபினர்க்கு கல்வி வேலை வாய்ப்பில் 20 விழுக்காடு ஒதுக்கீடு, கடந்த 2007ம் ஆண்டு நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மிக எழுச்சியோடு நாம் கொண்டாடி இருக்கிறோம்.

அப்போது திருமகனார் வாழ்ந்த இல்லம் புதுப்பிக்கப்பட்டு இருக்கிறது. விழாவை அடையாளம் காட்டக்கூடிய வகையில், வளைவு அமைக்கப்பட்டிருக்கிறது. அணையா விளக்கும் நாம் அமைத்துள்ளோம்.

நூலக கட்டிடம், பால்குடம் வைப்பதற்கு மண்டபம் முளைப்பாறி மண்டபம் என்று பசும்பொன் தேவர் திருமகனாருக்கு புகழ்சேர்க்க கூடிய வகையில் பல்வேறு திட்டங்களை நாம் நிறைவேற்றி இருக்கிறோம்.

இப்போது பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் 117வது பிறந்த நாளை முன்னிட்டு குருபூஜை நடத்தி இருக்கிறோம்.

பசும்பொன் நினைவிடத்தில் தமிழ்நாடு அரசு எல்லா ஏற்பாடுகளையும் சிறப்பான முறையில் செய்திருக்கிறது.

பசும்பொன்திருமகனார் பிறந்த நாள் விழாவின் போது ஏற்படுகிற கூட்ட நெரிசல்களை தவிர்ப்பதற்காகவும், மழை வெயிலில் இருந்து பொதுமக்களை பாதுகாக்கவும் ரூ.1 கோடியே 51 லட்சம் செலவில் புதிதாக அமைக்கப்பட்ட தெய்வீகதிருமகனார் முத்துராமலிங்க தேவர் அரங்கத்தை திறந்து வைத்துள்ளோம்.

இது மாதிரி பசும்பொன் முத்துராமலிங்க தேவரை போற்றக்கூடிய செயல்களையும், திட்டங்களையும் தொடர்ந்து செய்வோம். எனவே அவரது புகழும் வாழ்க.

கேள்வி: பா.ஜனதா 3வது முறையாக ஆட்சிக்கு வந்திருக்கிறது. மீனவர்களின் கைது அதிகரித்துக்கொண்டே இருக்கிறதே.

பதில்: தொடர்ந்து நாங்கள் கடிதம் எழுதிக் கொண்டு இருக்கிறோம். நான் டெல்லிக்கு செல்லும் போதெல்லாம் பிரதமரிடம் பேசியிருக்கிறேன். வெளியுறவுத்துறை அமைச்சரிடத்திலும் இதை குறிப்பிட்டு சொல்லியிருக்கிறோம். அவர்களும் அவ்வப்போது, நாங்கள் எழுதக்கூடிய கடிதத்திற்கு நடவடிக்கை எடுத்து, மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டு வருகிறார்கள். இருந்தாலும், இது தொடர்ந்து இருந்துவருகிறது. இதற்கு முடிவு காண வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டு இருக்கிறோம். அதில் எந்தவிதமான கருத்து மாறுபாடும் கிடையாது.

கேள்வி: கலைஞரால் தொடங்கப்பட்ட தேவர் கல்லூரியில் பணியிடங்கள் நிரப்புவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுகிறதா?

பதில்: அதற்கு தொடர்ந்து நாங்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறோம். இப்போது கூட 12 பேருக்கு பணி நியமனம் வழங்கியிருக்கிறோம். உரிய நடவடிக்கை தொடர்ந்துஎடுக்கப்படும்.

கேள்வி காவிரி வைகை குண்டாறு இணைப்புத் திட்டம் கடந்த 60 ஆண்டுகளாக கிடப்பில் இருக்கிறதே?

பதில்: 2008ம் ஆண்டு கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது தான் காவிரி குண்டாறு திட்டத்தின் முதற்கட்டப் பணி கதவனையில் இருந்து துவக்கப்பட்டது. அதன் பிறகு வந்த அ.தி.மு.க. ஆட்சியில் 9 ஆண்டு காலம் அதை கிடப்பில் போட்டு வைத்திருந்தார்கள். கடைசி வருடத்தில் தான் அதை செய்யப்போகிறோம் எனும் அறிவிப்பை வெளியிட்டு தொடர்ந்தார்கள். அதையும் கோவிட் பெருந்தொற்று வந்த காரணத்தினால் கிடப்பில் போடப்பட்டது. இப்போது நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு அந்தப் பணிகளை துரிதப்படுத்தி தற்போது 40 சதவீதம் வரை நிலஎடுப்பு பணிகள் முடிந்திருக்கிறது. தொடர்ந்து அந்தப் பணிகளை விரைந்து முடிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# 8 மாவட்ட மக்களே உஷார்... வெளுத்து வாங்கப்போகும் கனமழை

சென்னை, நவ.1

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடலூர், மயிலாடுதுறை, நாகை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், சிவகங்கை, ராமநாதபுரத்தில் இன்று கனமழைக்கு வாய்ப்பு உள்ளது. சென்னையில் 48 மணி நேரத்திற்கு இடி மின்னலுடன் மிதமான மழை பெய்யும். அதிகபட்சமாக 34 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகும் திண்டுக்கல், மதுரை, திருச்சி, கரூர், நாமக்கல், சேலம், ஈரோடு, தருமபுரி, கிருஷ்ணகிரியில் நாளை கனமழைக்கு வாய்ப்பு. திருப்பத்தூர், வேலூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி. அரியலூர் பெரம்பலூர், நீலகிரி, கோவை, திருப்பூர், ஈரோடு, தேனி, திண்டுக்கல், தென்காசி, நெல்லை, குமரி, மதுரை, விருதுநகர் உள்ளிட்ட மாவட்டங்களில் நாளை மறுநாள் கனமழைக்கு வாய்ப்பு உள்ளது.

# வண்டலூரில் 2 மணி நேரம் போக்குவரத்து நெரிசல் கிளாம்பாக்கம் பஸ் நிலையத்திற்குள் பஸ் போக முடியாமல் நின்றது

சென்னை, நவ.1

தீபாவளி பண்டிகையை கொண்டாட மக்கள் சொந்த ஊர்களுக்கு நேற்று முன்தினம் முதல் பயணத்தை தொடங்கினர். சென்னையில் இருந்து 2 நாட்களில் அரசு பஸ்களில் மட்டும் 3.5 லட்சம் பேர் பயணம் செய்துள்ளதாகவும் ஆம்னி பஸ்களில் 1 லட்சம் பேர் சென்றதாகவும் தெரிகிறது. சென்னை கிளாம்பாக்கத்தில் இருந்து சிறப்பு பஸ்கள் பல்வேறு நகரங்களுக்கு இயக்கப்பட்டு வருகிறது. கோயம்பேடு, மாதவரம் பஸ் நிலையத்தில் இருந்து இயக்கப்படும் பஸ்களும் வண்டலூர் வழியாக சென்றது. இதேபோல 1,400 ஆம்னி பஸ்களும் சேர்ந்து இயக்கப்பட்டன. சென்னையில் இருந்து புறப்பட்டு சென்ற அரசு பஸ்கள், ஆம்னி பேருந்துகள் வண்டலூரில் நெரிசலில் சிக்கின.

இரவு 9 மணி முதல் 12 மணி வரை ஜி.எஸ்.டி. சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. பஸ்கள் அணிவகுத்து நின்றன. கிளாம்பாக்கம் பஸ் நிலையத்திற்குள் பஸ்கள் செல்ல முடியாமல் போனதால் எல்லா பேருந்துகளும் சென்னைதிருச்சி சாலையில் நின்றன. நெரிசல் சீராக நள்ளிரவு 12 மணி ஆனது.

கிளாம்பாக்கம் பஸ் நிலையத்திற்குள் செல்ல ஒரே வழிதான் உள்ளது. பஸ்கள் வெளியே வர 4 வழிகள் உள்ளன. இதனால் தான் பிரச்சனை ஏற்பட்டது.

பஸ் முனையத்திற்குள் உள்ள பஸ்கள் வெளியே போக முடியாமல் நின்றதால் உள்ளே செல்வதில் சிரமம் ஏற்பட்டது.

இதனால் பயணிகள் சிரமத்திற்கு ஆளானார்கள். சென்னையில் இருந்து புறப்பட்ட பஸ்கள் எந்த இடத்திலும் நெரிசலில் சிக்கவில்லை. கிளாம்பாக்கத்தில்தான் பாதிப்பு ஏற்பட்டது. இதனால் வெளிவட்ட சாலையில் பஸ்கள் நீண்ட வரிசையில் நின்றன.

பஸ் பயணிகள் குறிப்பிட்ட நேரத்திற்கு குறிப்பிட்ட இடங்களுக்கு செல்ல வேண்டும். போக்குவரத்து நெரிசலை தவிர்க்க வேண்டும் என அரசு நடவடிக்கை எடுத்தாலும் கூட ஏதாவது ஒரு இடத்தில் எதிர்பாராமல் நடக்கும் தவறுகளால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

# ஆட்சியில் பங்கு என்பது குழப்பத்தை ஏற்படுத்தி விடும் துரை வைகோ

சென்னை, நவ.1

ஆட்சியில் பங்கு, அதிகாரத்தில் பங்கு என்று தமிழக வெற்றிக் கழக கட்சித் தலைவர் விஜய் கூறியிருப்பது குறித்து ம.தி.மு.க. முதன்மைச் செயலாளரான திருச்சி எம்.பி. துரை வைகோ பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது:

ஆட்சியில் அதிகார பகிர்வு குறித்து விஜய் கூறியிருப்பது தேவையற்ற குழப்பத்தையும், சர்ச்சையையும் உருவாக்கும். அதிகாரப் பகிர்வு விசயத்தில் ஏனைய கட்சிகள் முனைப்பு கொண்டிருந்தால் அது அவர்களுக்கே உரியது. ஆனால் ம.தி.மு.க. அந்த நிலைப்பாட்டில்இல்லை.

தற்போது இருக்கக்கூடிய அரசியலில் மதவாத பிரிவினை வாதிகளை எதிர்க்கும் இரண்டாவது அணியாக திராவிடம் இருக்கிறது. அதற்கு பிறகு 3வது அணிக்கு வாய்ப்பு குறைவுதான்.

எனவே மதவாத சக்திகளுக்கு மறைமுகமாக வாய்ப்பு கொடுக்கக்கூடிய சூழல் ஏற்படக்கூடாது. தமிழகத்திற்கும் தமிழக மக்களுக்கும் விஜய்யின் சேவை தேவை. எனவே அவர் யோசித்து நிதானமாக முடிவெடுக்க வேண்டும். யாரோ சொல்கிறார்கள் என்று முடிவெடுத்து மதவாத சக்திகளுக்கு ஆதரவாகபோய்விடக்கூடாது.



ம.தி.மு.க.வை பொறுத்தவரை தி.மு.க. ஆட்சியில் பல நிதி நெருக்கடி இருந்தாலும், நல்ல ஆட்சியாக செயல்பட்டு வருகிறது. ம.தி.மு.க., தி.மு.க. கூட்டணியில் இருந்தாலும் நல்ல விசயங்களுக்கு ஆதரவு கொடுத்து வருகிறோம்.

கள்ளக்குறிச்சி உள்ளிட்ட சம்பவத்தை சுட்டிக்காட்டி குரல் கொடுத்தோம். எனவே ஆட்சியில் பங்கு என்பதில் எங்களுக்கு உடன்பாடு இல்லை.

விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன், தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை ஆகியோர் அமைச்சரவையில் இடம் தேவை என்ற சமீபத்திய கோரிக்கை அவர்களுடைய இயக்க நிரவாகிகளின் நிலைப்பாட்டை பிரதிபலிக்கின்றனர். அது தவறு இல்லை. அது அவர்களுடைய ஆசை. ஆனால் ஆட்சியில் பங்கு என்பதில் எங்களுக்கு உடன்பாடு இல்லை.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# தீபாவளி பண்டிகை: தஞ்சையில் மல்லிகை கிலோ ரூ.2000க்கு விற்பனை

தஞ்சாவூர், நவ.1

தஞ்சை பூக்காரதெரு, தொல்காப்பியர் சதுக்கம் பகுதிகளில் பூச்சந்தை அமைந்துள்ளது. இங்கு திண்டுக்கள், ஊட்டி, ஓசூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இருந்து பூக்கள் விற்பனைக்காக கொண்டு வரப்படும். இதேப்போல் இங்கிருந்தும் பூக்கள் விற்பனைக்காக பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

பொதுவாக முகூர்த்தநாட்கள், பண்டிகை காலங்களில் பூக்களின் தேவை அதிகம் இருப்பதால் அவற்றின் விலையும் உயர்ந்து காணப்படும். வரத்து குறைவாக இருந்தாலும்



விலை அதிகரிக்கும்.

இந்த நிலையில் நாளை (வியாழக்கிழமை) தீபாவளி பண்டிகை கொண்டாடப்பட உள்ளது. மேலும் நாளை முகூர்த்த நாளாகும். தீபாவளி மற்றும் முகூர்த்தநாளையொட்டி பூக்களின் தேவை வழக்கத்தை விட அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக அவற்றின் விலை உச்சத்தை தொட்டுள்ளது. அதன்படி கடந்த வாரம் மல்லிகை கிலோ ரூ.500 முதல் 600 விற்பனை செய்யப்பட்டது.

ஆனால்இன்று4மடங்கு உயர்ந்து கிலோ ரூ.2000க்கு விற்பனையாகின. இதேப்போல் முல்லை பூவும் கிலோ ரூ.2000க்கு விற்கப்பட்டது.

கனகாம்பரம் ரூ.1000, செவ்வந்தி ரூ.250, அரளி ரூ.300, ரோஜா ரூ.300க்கு விற்பனை செய்யப்பட்டன. இவற்றின் விலையும் அதிகமாகும்.

இது பற்றி வியாபாரிகள் கூறும்போது,

நாளை தீபாவளி பண்டிகை, முகூர்த்தநாளை முன்னிட்டு பூக்களின் விலை உயர்ந்துள்ளது. வரத்து அதிகமாக இருந்தாலும் தேவை அதிகம் என்பதால் அவற்றின் விலை அதிகரித்துள்ளது என்றனர்.

# சமயபுரம் கோவில் தெப்பக்குளத்தில் மிதந்த 2 ஆண் பிணங்கள்; போலீசார் விசாரணை

மண்ணச்சநல்லூர், நவ.1

திருச்சி மாவட்டத்தில் உள்ள சமயபுரம் மாரியம்மன் கோவிலுக்கு, தமிழகம் மட்டுமின்றி பல்வேறு இடங்களில் இருந்து நாள்தோறும் பக்தர்கள் வந்த வண்ணம் இருப்பர். இதனால் சமயபுரம் கோவில் எப்போதும் கூட்டம் அலைமோதும். இந்த கோவிலுக்கு உரிய தெப்பக்குளம், கோவிலில் இருந்து சற்று தொலைவில் உள்ளது. இந்த தெப்ப குளத்தில் இருந்துதான் பக்தர்கள் அக்னிசட்டி, அலகு குத்தி, பால்குடம் எடுத்துக்கொண்டு ஊர்வலமாக சென்று அம்மனை தரிசிப்பார்கள்.

இந்த தெப்ப குளத்தில் தான் தெப்ப உற்சவம் நடைபெறும். கோவிலில இருந்து சுமார் 800



மீட்டர் தொலைவில் உள்ள இந்த தெப்பகுளம் ஆழம் அதிகம் என்பதால் பக்தர்கள் குளிப்பதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

பக்தர்கள் குளத்தில் இறங்கி குளிக்க வேண்டாம் என கோயில் நிர்வாகம் சார்பில் அறிவிப்பு எச்சரிக்கைபலகைஅங்கு வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த தெப்பக்குளத்தில் சடலம் ஒன்று மிதப்பதாக சமயபுரம் போலீசாருக்கு தகவல் கிடைத்தது. அப்போது அங்கு சென்ற போலீசார்காக்கி சட்டை, பனியன் அணிந்த நிலையில் சுமார் 40 வயது மதிக்கத்தக்க ஆண் சடலம் ஒன்று மிதப்பதை கண்டனர். இதனை தொடர்ந்து அங்கு விசாரணையை தொடங்கிய போலீசார், தெப்பகுளத்தை சுற்றி சோதனை மே ற்கொண்டனர். அப்போது அங்கு உள்ளாடை மட்டுமே அணிந்த நிலையில் மேலும் ஒரு ஆண் சடலம் தண்ணீரில் மிதந்து கொண்டிருந்தது.

இதனை கண்டு அதிர்ச்சி அடைந்த போலீசார் அந்த சடலத்தையும் மீட்டனர். இரண்டு சடலங்களும் பிரேத பரிசோதனைக்காக ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவர்கள் யார்? இது விபத்தா? தற்கொலையா? அல்லது கொலையா? என்பது குறித்து சமயபுரம் போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். சமயபுரம் மாரியம்மன் கோவில் தெப்பகுளத்தில்2ஆண்சடலங்கள் மீட்கப்பட்டது அப்பகுதியில் பரபர ப்பை ஏற்படுத்தி உள்ளது.

# கூட்டணி குறித்து விஜய் வெளிப்படையாக பேசக்கூடாது திருமாவளவன்

வேங்கிக்கால், நவ.1

திருவண்ணாமலையில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் அளித்த பேட்டியில் கூறியதாவது:

கூட்டணி, அதிகாரத்திலும் பங்கு என்பது குறித்து விஜய் இப்போது பேசியிருக்கக்கூடாது, இன்னும் ஒன்றரை ஆண்டு காலம் தி.மு.க. ஆட்சி நடக்க உள்ளது.

அதுமட்டுமின்றி, இது போன்றுகூட்டணிகுறித்து வெளிப்படையாக அவர் பேசக்கூடாது. மறைமுகமாக ஒவ்வொரு கட்சியையும் அழைத்து, ஒவ்வொரு கட்சிக்கும் எத்தனை சீட்டுகள் ஒதுக்கீடு செய்யப்படும், யார் வேட்பாளர் என்பதெல்லாம் வெளிப்படையாக பேசக்கூடாது.

விஜய்யின்இந்தநிலைப்பாடு, தி.மு.க. கூட்டணியில் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்குத்தான். இது, சரியான நேரத்தில் கையாளப்பட



வில்லை.

மத்தியில் கூட்டணி ஆட்சி என்பது காலத்தின் கட்டாயத்தால் உருவானது. ஒரு தேசிய கட்சி ஜனநாயக அடிப்படையில் தனது கூட்டணி கட்சிகளுக்கு பகிர்ந்து அளித்ததன் மூலமாக உருவானது அல்ல.

அதேபோல், தமிழகத்திலும் காலத்தின் கட்டாயத்தால்தான்கூட்டணி ஆட்சி உருவாக்க முடியும். அப்படி உருவானால், அது ஒரு இயல்பான நிலையாக இருக்காது.

தமிழகத்தில் எந்த கட்சியும் தங்களை பலவீனப்படுத்திக் கொள்ள விரும்பாது. ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்கள், கூட்டணி கட்சிகளுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளித்து, தங்கள் வலிமையை இழக்கச் செய் வதற்கு இடம்கொடுக்க மாட்டார்கள்.

விஜய் திராவிட மாடல் ஆட்சியையும், குடும்ப அரசியலையும் எதிர்க்கிறார். விஜய்யின் ஒட்டு மொத்த பேச்சும் தி.மு.க. மற்றும் தி.மு.க அரசு எதிர்ப்பாகவே உள்ளது.

இது ஒன்றும் புதிய அரசியல்நிலைப்பாடுஇல்லை. தமிழகத்தில் நீண்டகாலமாக தி.மு.க. மற்றும் தி.முக. அரசை எதிர்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

'பாசிசம் என்றால், நீங்கள் பாயசமா' என்று கிண்டல்அடிப்பதில்2பொருள் உள்ளது. ஒன்று பாசிச எதிர்ப்பு பெரிய விஷயம் இல்லை என்று எடுத்துக் கொள்ளலாம்.

மற்றொன்று, நீங்களும் பாசிசம்தான், நீங்கள் ஒன்றும் ஜனநாயக சக்திகள் இல்லை என்று புரிந்து கொள்ளலாம். நீங்களும் பாசிசம்தான் என்று தி.மு.க.வை மட்டும் சொல்கிறாரா? அல்லது தி.மு.க.வை சார்ந்துள்ள அகில இந்திய அளவில் ஐஎன்டிஐஏ கூட்டணியில் உள்ள 28 கட்சிகளையும் சொல்கிறாரா?. இதை எல்லாம் பார்க்கும்போது, பா.ஜனதா எதிர்ப்பில் த.வெ.க. தலைவர் விஜய் உறுதியாக இல்லை".

இவ்வாறு அவர் கூறினார்.

# சிவகார்த்திகேயன் கெரியரில் சிறப்பாக அமைந்த 'அமரன்' முதல் நாள் வசூல் எவ்வளவு தெரியுமா?



ராஜ்குமார் பெரியசாமி இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடித்து நேற்று திரையரங்கில் வெளியான படம் 'அமரன்'. ராஜ்கமல் பிலிம்ஸ் இப்படத்தை தயாரித்துள்ள நிலையில் ஜி.வி.பிரகாஷ் குமார் இசையமைத்துள்ளார். மறைந்த முன்னாள் ராணுவ வீரர் மேஜர் முகுந்தின் வாழ்க்கையைத் தழுவி இப்படம் உருவாகியுள்ளது.

இதில் சிவகார்த்திகேயன் மேஜர் முகுந்தாகவும், முகுந்தின் மனைவி இந்துவாக நடிகை சாய் பல்லவியும் நடித்துள்ளனர். உலகளவில் சுமார் 900க்கும் மேற்பட்ட திரையரங்குகளில் அமரன் திரைப்படம் வெளியானது. தொடர்ந்து, பல்வேறு பிரபலங்களின் பாராட்டுகளை இப்படம் பெற்று வருகிறது.

இந்நிலையில், இப்படத்தின் முதல்நாள் வசூல் குறித்த தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி, அமரன் படம் நேற்று மட்டும் உலகம் முழுவதும் ரூ.21 கோடி வசூலித்திருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதில், தமிழ் நாட்டில் மட்டும் ரூ.15 கோடி ஆகும். இது சமீபத்தில் கமல்ஹாசன் நடிப்பில் வெளியான 'இந்தியன் 2' படம் முதல் நாளில் வசூல் செய்ததை விட அதிகமாகும். இந்தியன் 2 முதல் நாளில் ரூ.13 கோடி வசூலித்தது.

இந்த ஆண்டு இதுவரை, விஜய்யின் 'தி கோட்' மற்றும் ரஜினிகாந்தின் 'வேட்டையன்' ஆகிய படங்கள் மட்டுமே நல்ல தொடக்கத்தை பெற்றிருந்தநிலையில், தற்போது 'அமரன்' ரூ.20 கோடிக்கு மேல் வசூலித்து சிவகார்த்திகேயன் கெரியரில் சிறப்பான தொடக்கத்தை பெற்ற படமாக அமைந்துள்ளது.

# ஆர்.ஜே. பாலாஜி நடிக்கும் புதிய படத்தின் டைட்டில் டீசர் வெளியானது

ஆர்.ஜே.பாலாஜி கடைசியாக 'சிங்கப்பூர்சலூன்' என்ற திரைப்படத்தில் கதாநாயகனாக நடித்து இருந்தார். இந்த படம் மக்களிடையே கலவையான விமர்சனங்களை பெற்றது. இதைத் தொடர்ந்து இயக்குநர் சித்தார்த் விஸ்வநாத் இயக்கத்தில் ஆர்.ஜே பாலாஜி தற்போது 'சொர்க்கவாசல்' என்ற படத்தில் கதாநாயகனாக நடித்துள்ளார். இந்த படத்தின் டீசர் சமீபத்தில் வெளியாகி வைரலானது.




இன்னொருபுறம் நடிகர் சூர்யாவின் 45 திரைப்படத்தை ஆர்.ஜே பாலாஜி இயக்கவுள்ளார். இந்த படம் பேண்டசி கலந்த ஆக்சன் திரைப்படமாக இருக்கும் என தகவல் வெளியானது. 'சூர்யா 45' படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது.

இந்த நிலையில் ஆர்.ஜே.பாலாஜி கதாநாயகனாக நடிக்கும் புதிய படத்தின் டைட்டில் டீசர் தற்போது வெளியாகி உள்ளது. அறிமுக இயக்குனர் அம்மாமுத்து சூர்யா இயக்கும் இந்த படத்துக்கு 'ஹேப்பி என்டிங்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த படத்துக்கு ஷான் ரோல்டன் இசையமைக்கிறார். அடுத்த ஆண்டு இந்த படம் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

குட் நைட், லவ்வர் உள்ளிட்ட படங்களை தயாரித்த மில்லியன் டாலர் ஸ்டூடியோஸ் தயாரிக்கும் இந்த படத்துக்கு தினேஷ் புருஷோத்தமன் ஒளிப்பதிவு செய்கிறார். டைட்டில் டீசரில் ஆர்.ஜே. பாலாஜி தனது காதல் தோல்வி கதைகளை கூற, ரத்தம் தெறிக்கும் காட்சிகள் இடம்பெற்றுள்ளன. இந்த டைட்டில் டீசர் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

# சுசீந்திரன் இயக்கியுள்ள 2கே லவ் ஸ்டோரி படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு

இயக்குனர் சுசீந்திரன் இயக்கத்தில் இன்றைய நவ நாகரீக இளைஞர்களின் வாழ்வை சொல்லும் படமாக, ரொமான்ஸ் ஜானரில் உருவாகியுள்ள திரைப்படம் '2கே லவ் ஸ்டோரி'. இன்றைய இளம் தலைமுறையின் காதல், நட்பு என அவர்களது வாழ்வை பிரதிபலிக்கும் படைப்பாக இந்த படம் உருவாகியுள்ளது.




சிட்டி லைட் பிக்சர்ஸ் தயாரித்துள்ள இந்த படத்துக்கு டி.இமான் இசையமைத்துள்ளார். புதுமுக நாயகன் ஜெகவீர் நாயகனாக நடித்துள்ள இந்த படத்தில் மீனாட்சி கோவிந்தராஜன் நாயகியாக நடித்துள்ளார். மேலும் பாலசரவணன், ஆண்டனி பாக்யராஜ், ஜெயபிரகாஷ், வினோதினி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

திருமணத்திற்கு புகைப்படம் எடுக்கும் இளைஞர்கள் குழுவின் வாழ்வில் நடக்கும் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு, அனைவரும் ரசிக்கும் வகையில் இந்த படத்தின் திரைக்கதையை சுசீந்திரன் அமைத்துள்ளதாக படக்குழுவினர் தெரிவித்துள்ளனர். சமீபத்தில் '2கே லவ் ஸ்டோரி' படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகி வைரலானது. இந்த படத்துக்கு தணிக்கை குழு 'யு' சான்றிதழ் வழங்கியுள்ளது.

இந்த நிலையில் தீபாவளி வாழ்த்து தெரிவித்து புதிய போஸ்டர் ஒன்றை வெளியிட்டுள்ள 2கே லவ் ஸ்டோரி' படக்குழு படத்தின்ரிலீஸ்தேதியைஅறிவித்துள்ளது.அதன்படி இந்ததிரைப்படம்வருகிறடிசம்பர்மாதம்13ந்தேதிதிரையரங்குகளில் வெளியாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தென் ஆப்பிரிக்கா வெற்றி.. உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் புள்ளி பட்டியலில் அணிகளின் நிலை என்ன..?



தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் அணி வங்காளதேசத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இதில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் தென் ஆப்பிரிக்கா வெற்றி பெற்று தொடரில் முன்னிலையில் இருந்தது. இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கு இடையிலான 2வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி சட்டோகிராமில் கடந்த 29ம் தேதி தொடங்கியது. இதில் இன்னிங்ஸ் மற்றும் 273 ரன்கள் வித்தியாசத்தில் தென் ஆப்பிரிக்கா வெற்று பெற்று தொடரை கைப்பற்றியது. இந்நிலையில், உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) வெளியிட்டுள்ளது. இந்த பட்டியலில் இந்திய அணி (62.82 சதவீதம்) முதல் இடத்தில் நீடிக்கிறது. ஆஸ்திரேலியா (62.50 சதவீதம்) 2ம் இடத்திலும், இலங்கை (55.56 சதவீதம்) 3ம் இடத்திலும் உள்ளன. வங்காளதேசத்திற்கு எதிராக வெற்றி பெற்ற தென் ஆப்பிரிக்கா (54.17 சதவீதம்) 5வது இடத்தில் இருந்து 4வது இடத்திற்கு வந்துள்ளது. இதைத்தொடர்ந்து நியூசிலாந்து (50.00 சதவீதம்) ஒரு இடம் சரிந்து 5வது இடத்திலும், இங்கிலாந்து (40.79 சதவீதம்) 6வது இடத்திலும் உள்ளன. இதையடுத்து பாகிஸ்தான் 7வது (33.33 சதவீதம்), இடத்திலும், 8 முதல் 9 இடங்களில் முறையே வங்காளதேசம் (27.50 சதவீதம்), வெஸ்ட் இண்டீஸ் (18.52 சதவீதம்) அணிகள் உள்ளன.

# முதலாவது ஒருநாள் போட்டி: இங்கிலாந்தை எளிதில் வீழ்த்தி வெஸ்ட் இண்டீஸ் வெற்றி




இங்கிலாந்து கிரிக்கெட் அணி வெஸ்ட் இண்டீசில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இதில் இவ்விரு அணிகளுக்கு இடையேயான முதலாவது ஒருநாள் போட்டி ஆண்டிகுவாவில் நேற்று நடைபெற்றது.

இதில் டாஸ் வென்ற வெஸ்ட் இண்டீஸ் பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் பேட்டிங் செய்ய களமிறங்கிய இங்கிலாந்து பேட்ஸ்மேன்கள் வெஸ்ட் இண்டீஸ் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் திணறினர். சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை கைப்பற்றிய அசத்திய வெஸ்ட் இண்டீஸ் பவுலர்கள் இங்கிலாந்து அணியை 45.1 ஓவர்களில் 209 ரன்களுக்குள் ஆல் அவுட்டாக்கி அசத்தினர். இங்கிலாந்து தரப்பில் அதிகபட்சமாக கேப்டன் லிவிங்ஸ்டன் 48 ரன்கள் அடித்தார். வெஸ்ட் இண்டீஸ் தரப்பில் குடகேஷ் மோட்டி 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார். பின்னர் 210 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய வெஸ்ட் இண்டீஸ் ஆரம்பம் முதலே அதிரடியில் இறங்கியது. இங்கிலாந்து பந்துவீச்சை எந்தவித சிரமமுன்றி எதிர்கொண்ட எவின் லூயிஸ் பிரண்டன் கிங் விரைவாக ரன்களை சேர்த்தனர். வெஸ்ட் இண்டீஸ் 15 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 81 ரன்கள் அடித்திருந்தபோது மழை குறுக்கிட்டது. இதன் காரணமாக ஆட்டம் தடைபட்டது. ஆட்டம் நீண்ட நேரம் தடைபட்டதால் டக்வொர்த் முறைப்படி வெஸ்ட் இண்டீஸ் வெற்றி பெற 35 ஓவர்களில் 157 ரன்கள் அடிக்க வேண்டும் என்று இலக்கு மாற்றியமைக்கப்பட்டது. மழை நின்றவுடன் ஆட்டம் மீண்டும் தொடங்கப்பட்டது. தொடர்ந்து பேட்டிங் செய்த வெஸ்ட் இண்டீஸ் அணியில் பிரண்டன் கிங் நிதானமாக விளையாட, மறுமுனையில் லூயிஸ் அதிரடியில் வெளுத்து வாங்கினார். முதல் விக்கெட்டுக்கு இந்த ஜோடி 118 ரன்கள் சேர்த்த நிலையில், கிங் 30 ரன்களில் ஆட்டமிழந்தார். சதம் அடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட லூயிஸ் இலக்கை நெருங்கும் வேளையில் 94 ரன்களில் ஆட்டம் இழந்தார். முடிவில் வெஸ்ட் இண்டீஸ் வெறும் 25.5 ஓவர்களிலேயே 2 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து 157 ரன்கள் அடித்து எளிதில் வெற்றி பெற்றது. இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் வெஸ்ட் இண்டீஸ் 10 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

# நியூசிலாந்துக்கு எதிரான 3வது டெஸ்ட்: பும்ரா ஏன் அணியில் இடம்பெறவில்லை..? பி.சி.சி.ஐ. விளக்கம்

இந்தியா நியூசிலாந்து இடையிலான 3வது டெஸ்ட் போட்டி மும்பையில் இன்று தொடங்குகிறது. இதில் டாஸ் வென்ற நியூசிலாந்து அணி பேட்டிங்கை தேர்வு செய்துள்ளது. அதன்படி இந்தியா முதலில் பந்துவீச உள்ளது. இந்த போட்டிக்கான இந்திய அணியில் ஒரே மாற்றமாக பும்ராவுக்கு பதிலாக முகமது சிராஜ் சேர்க்கப்பட்டுள்ளார். இந்நிலையில் பும்ரா இடம்பெறாததற்கான காரணம் குறித்து விளக்கமளித்துள்ள பி.சி.சி.ஐ. தனது எக்ஸ் பக்கத்தில், "வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள பும்ரா இன்னும் முழுமையாக குணமடையவில்லை. அதன் காரணமாக நியூசிலாந்துக்கு எதிரான 3வது டெஸ்ட் போட்டியில் அவர் அணியில் இடம்பெறவில்லை" என்று பதிவிட்டுள்ளது. இரு அணிகளுக்கான பிளேயிங் 11 வருமாறு: இந்தியா: ஜெய்ஸ்வால், ரோகித் சர்மா (கேப்டன்), சுப்மன் கில், விராட் கோலி, பண்ட், சர்பராஸ் கான், ஜடேஜா, வாஷிங்டன் சுந்தர், அஸ்வின், ஆகாஷ் தீப் மற்றும் சிராஜ். நியூசிலாந்து: டாம் லாதம் (கேப்டன்), கான்வே, வில் யங், ரச்சின் ரவிந்திரா, டேரில் மிச்செல், டாம் பிளண்டெல், கிளென் பிலிப்ஸ், இஷ் சோதி, மாட் ஹென்ரி, அஜாஸ் படேல் மற்றும் வில்லியம் ஓ ரூர்க்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.